

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு நிறைவு விழா மற்றும் 101வது பிறந்த நாளை முன்னிட்டு ஈரோடு தெற்கு மாவட்டக் கழக மகளிர் அணி அமைப்பாளர் திலகவதி ஏற்பாட்டில் வெங்கடேஸ்வரா காப்பகத்திற்கு 10 ஆயிரம் ரூபாய் மதிப்புள்ள அரிசி உள்ளிட்ட மளிகை பொருள்களை மாவட்ட கழக செயலாளரும் வீட்டுவசதி,நகர்ப்புற வளர்ச்சி, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை துறை அமைச்சருமான சு.முத்துசாமி வழங்கினார். நிகழ்வில் மகளிர் அணி மாவட்டத் துணை அமைப்பாளர்கள் சேவை காந்திமதி, பிரியா மூர்த்தி, கல்பனா, அருள்மொழி செல்வி .உள்ளிட்ட கழக நிர்வாகிகள் பலர் உள்ளனர்.



திருச்சி தெற்கு மாவட்ட தி.மு.கழகம் சார்பாக, திருவெறும்பூர் தொகுதியில், திருச்சி தெற்கு மாவட்டம் மாநகர ஆதிதிராவிட நலக்குழு சார்பாக, முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு நிறைவு விழா நடைபெற்றது. மாவட்ட ஆதிதிராவிடர் நலக்குழு மாவட்ட அமைப்பாளர் எம்.சி.சிவக்குமார் வரவேற்றார். இதில் கழகத் துணைப் பொதுச் செயலாளர் அந்தியூர் செல்வராஜ் எம்.பி., திருச்சி தெற்கு மாவட்டக் கழகச் செயலாளர் – அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி, மாநில ஆதிதிராவிடர் நலக்குழு செயலாளர் ஆ.கிருஷ்ணசாமி, மாநகரக் கழகச் செயலாளர் மு.மதிவாணன் ஆகியோர் கலந்துகொண்டு ஆதிதிராவிடர் மக்களுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கி கலைஞர் புகழ் போற்றினார்கள். இறுதியாக மாநகர ஆதிதிராவிட நலக்குழு அமைப்பாளர் ஜெ.அன்பழகன் நன்றியுரையாற்றினார். இந்நிகழ்வில் சேகரன், வண்ணை அரங்கநாதன், செந்தில், மாவட்டத் துணைச் செயலாளர் செங்குட்டுவன், துணைமேயர் திவ்யா, பகுதி கழகச் செயலாளர் நீலமேகம் மற்றும் மாவட்ட, மாநகர, பகுதி, ஒன்றிய, நகர, பேரூர் கழக நிர்வாகிகள் அணிகளின் அமைப்பாளர்கள், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

## முனைவர் கோவி. செழியன் சிறப்புரை!

# ஜூன் 16ம் தேதி காரைக்குடியில் கலைஞர் நூற்றாண்டு நிறைவு விழா பட்டிமன்றம்!

## அமைச்சர் கே.ஆர். பெரிய கருப்பன் தலைமை! மு.தென்னவன் தொடங்கி வைக்கிறார்!

சிவகங்கை. ஜூன் 13 - சிவகங்கை மாவட்டம் காரைக்குடி மாநகர தி.மு.க. சார்பில் வருகிற 16 ஆம் தேதி ஞாயிற்றுக் கிழமை முத்தமிழ் அறிஞர் கலைஞர் நூற்றாண்டு நிறைவு நாள் பட்டிமன்றம் நடைபெற உள்ளது. சிவகங்கை மாவட்டக் கழக செயலாளரும் , கூட்டுறவுத்துறை அமைச்சருமான கே.ஆர்.பெரிய கருப்பன் தலைமையில் காரைக்குடி மாநகர மேயரும், தலைமைச் செயற்குழு உறுப்பினருமான எஸ்.முத்து துரை திருமதி. தமிழரசிரவிக்குமார் எம்.எல்.ஏ., மாவட்ட அவைத் தலைவர் அ. கணேசன், முன்னாள் எம்.எல்.ஏ., சுப. துரைராஜ், மாவட்ட துணைச் செயலாளர்கள் த.சேங்கை. மாறன், திருமதி ஜோன்ஸ் ரூசோ,கே.எஸ். எம்.மணிமுத்து, மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் நாகனி செந்தில்குமார், நிர்வாகிகள் சன். சுப்பையா, உதயம் ராஜு, லட்சுமி ராஜ் கணேஷ், பெரி. வயிரவன், சே.சொக்கலிங்கம், அன்பு என்ற சேவியர், போஸ் குணசேகரன், குழ. ஜான் கென்னடி, இ ராம. அன்பழகன், மெ. பழனியப்பன், துரை.நாகராஜ், காரை சுரேஷ், பா.கணேசன், மாமன்ற உறுப்பினர்கள் எம்.கார்த்திகேயன், எஸ். மைக்கேல், ஹேமலதா செந்தில், தெய்வானை இள மாறன், கலா. காசிநாதன், நாச்சம்மை சிவாஜி, எஸ்.முகமது சித்திக், ஜெ. பிலோ மீனா, சுப. ஹரிதாஸ் ராணி ஜெய் த்துன் சேட், சந்தியா கார்த்திகேயன், திவ்யா சக்தி, விஷ்ணு பெருமாள், எஸ். பூமிநாதன் மலர்விழி பழனியப்பன், லில்லி திரேசு அருள் ராஜ், தனம் சிங்கமுத்து ஆகியோர் முன்னிலையில் நடைபெறுகிறது.

துணை மேயரும் காரைக்குடி நகரக் கழகச் செயலாளருமான என். குணசேகரன் வரவேற்றுப் பேசுகிறார். கலைஞர் நூற்றாண்டு நிறைவு நாள் பட்டிமன்றத்தினை முன்னாள் அமைச்சரும் இலக்கிய அணி புரவலருமான மு. தென்னவன் துவக்கி வைத்து சிறப்புரை ஆற்றுகிறார்.

அரசு கொறடா முனைவர் கோவி.செழியன் எம்.எல்.ஏ. தலைமையில் கலைஞர் ஊட்டிய உணர்வே என்ற தலைப்பில் கரூர் முரளி, சரத் பாலா, கலைஞர் தீட்டிய திட்டங்களே என்ற தலைப்பில் நெல்லிக்குப்பம் புகழேந்தி, சைதை சாதிக், ஆகியோர் கலந்து கொண்டு பேசுகிறார்கள். மாநகர துணைச் செயலாளர் சொ. கண்ணன் நன்றி கூறுகிறார்.

பட்டிமன்ற நிகழ்ச்சி ஏற்பாடுகளை காரைக்குடி மாநகர செயலாளர் என். குணசேகரன் தலைமையில் காரைக்குடி நகர்கழக நிர்வாகிகள் செய்து வருகிறார்கள்.

## மயிலை த.வேலு தலைமை! ஜெ.கருணாநிதி எம்.எல்.ஏ. - கே.ஏழுமலை முன்னிலை!

# தியாகராயர் நகரில் கலைஞர் நூற்றாண்டு நிறைவு விழா!

## திண்டுக்கல் ஐ.லியோனி - தமிழச்சி தங்கபாண்டியன் எம்.பி.- நடிகர் எஸ்.வி.சேகர் சிறப்புரை!

சென்னை, ஜூன் 13- சென்னை தென் மேற்கு மாவட்ட தி.மு.க. சார்பில் தியாகராயர் நகர் தொகுதியில் கலைஞர் 100 திருவிழா நேற்று முன்தினம் (11.06.2024) சர் பிட்டி தியாக ராயர் கலையரங்கில் தலைவர் கலைஞருடன் பழகிய அனுபவங்களை பகிரும் கருத்தரங்கம் மாவட்க் கழகச் செயலாளர் மயிலை த வேலு எம்.எல்.ஏ. தலைமை வகிக்க பகுதிச் செயலாளர்கள் ஜெ.கருணாநிதி எம்.எல்.ஏ., கே. ஏழுமலை எம்.சி., நந்தனம் மதி எம்.சி., மயிலை எஸ்.முரளி ஆகியோர் முன்னிலையில்

மாம்பலம் ஆ.சந்திரசேகர், மு.சத்யா, நந்தனம் வேதா, கே.மலர், என். அன்பழகன் ஆகியோர் வரவேற்றுப் பேசினர்.

அனுபவங்களை பகிர்ந்து திண்டுக்கல் ஐ லியோனி, முனைவர் தமிழச்சி தங்க பாண்டியன் எம்.பி., நடிகர் எஸ்.வி. சேகர் ஆகியோர் சிறப்புரையாற்றினர்.

இந் நிகழ்ச்சியில் தலைமைச் செயற்குழு, மாநில நிர்வாகிகள், பொதுக்குழு உறுப்பினர்கள், வட்ட செயலாளர்கள், மாவட்ட பிரதிநிதிகள், அணிகளின் மாவட்ட, பகுதி, வட்ட அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், வட்ட நிர்வாகிகள் மற்றும் கழக முன்னணியினர் கலந்துக் கொண்டுசிறப்பித்தனர்.

வட்டக் கழகச் செயலாளர்கள் பி.ஜெயக்குமார், பி.மாரி ஆகியோர் நன்றி கூறினர்.

## திருவள்ளூர் மத்திய மாவட்டக் கழகத்தினர் பெருந்திரளாக கலந்து கொள்வீர் !

# ஜூன் 15ஆம் தேதி கோவையில் முப்பெரும் விழா!

## மாவட்ட கழகச் செயலாளர் ஆவடி சா.மு.நாசர் எம்.எல்.ஏ. வேண்டுகோள் !

திருவள்ளூர், ஜூன் 13- கோயம்புத்தூர் கொடிசியா மைதானத்தில் முதலமைச்சர், கழக தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களின் தலைமையில் மற்றும் கூட்டணி கட்சித் தலைவர்கள் கலந்து கொள்ளும் “முப்பெரும் விழா பொதுக்கூட்டத்தில்” திருவள்ளூர் மத்திய மாவட்ட தி.மு.க. சார்பில் கழக நிர்வாகிகள் மற்றும் கழக தோழர்கள் பெருந்திரளாக கலந்து கொள்ள வேண்டுமென முன்னாள் அமைச்சர், மாவட்ட செயலாளர் ஆவடி சா.மு.நாசர் எம்.எல்.ஏ. விடுத்துள்ள வேண்டுகோள் வருமாறு:



வருகின்ற ஜூன் 15 ஆம் தேதி மாலை 4.00 மணியளவில் கோயம்புத்தூர் கொடிசியா மைதானத்தில் வெற்றி நாயகன் தமிழ்நாடு முதலமைச்சர். கழக தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களின் தலைமையிலும் மற்றும் கூட்டணி கட்சித் தலைவர்கள் கலந்துக் கொள்ளும், முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு நிறைவு விழா, நாற்பது நாடாளுமன்றத் தொகுதிகளிலும் வெற்றியளித்த தமிழ்நாட்டு மக்களுக்கு நன்றி தெரிவிக்கும் விழா, சீர்மிகு வெற்றிக்கு கழகத்தை வழிநடத்திச் சென்ற தமிழ்நாடு முதலமைச்சர், கழகத் தலைவர் அவர்களுக்குப் பாராட்டு விழா என நடைபெறும் “முப்பெரும் விழா பொதுக்கூட்டத்தில்” திருவள்ளூர் மத்திய மாவட்ட தி.மு.க. சார்பில் பெருந்திரளாக கலந்து கொள்ள வேண்டும்.

அதுசமயம், இக்கூட்டத்தில் திருவள்ளூர் மத்திய மாவட்டத்தைச் சேர்ந்த, மாநில, மாவட்ட கழக நிர்வாகிகள், மாநகர, ஒன்றிய, நகர, பகுதி, பேரூர், வார்டு, கிளைக் கழக செயலாளர்கள் மற்றும் நிர்வாகிகள், தலைமை செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், முன்னாள். இந்நாள் நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், மாநகர மேயர். முன்னாள், இந்நாள் ஒன்றிய பெருந்தலைவர்கள், நகரமன்றதலைவர்கள், பேரூராட்சி மன்றதலைவர்கள், மண்டலக்குழுத் தலைவர்கள், ஊராட்சி மன்ற தலைவர்கள், மாவட்ட ஊராட்சிக்குழு, ஒன்றியக் குழு உறுப்பினர்கள்,

மற்றும் மாநகராட்சி, நகராட்சி, பேரூராட்சி மன்ற உறுப்பினர்கள். முன்னாள், இந்நாள் உள்ளாட்சி பிரதிநிதிகள், மாவட்ட, மாநகர, ஒன்றிய, நகர, பகுதி, பேரூர் கழக இளைஞரணி, மாணவரணி, மகளிரணி, மகளிர் தொண்டரணி. வழக்கறிஞர் அணி, விவசாய அணி, விவசாய தொழிலாளர் அணி, இலக்கிய அணி, கலை இலக்கிய பகுத்தறிவு பேரவை,

தொண்டரணி, தொழிலாளர் அணி, மீனவரணி, நெசவாளர் அணி, பொறியாளர் அணி, மருத்துவர் அணி, வர்த்தகர் அணி, ஆதிதிராவிடர் நலக்குழு அணி, சிறுபான்மையினர் நல உரிமை பிரிவு, தகவல் தொழில்நுட்ப பிரிவு அணி, சுற்றுச்சூழல் அணி, அயலக அணி மற்றும் தொழிலாளர் முன்னேற்றச் சங்கம் ஆகிய அணிகளின் நிர்வாகிகள். வாக்குச்சாவடி முகவர்கள் மற்றும் கழக முன்னோடிகள், கழக தோழர்கள் அனைவரும் பெருந்திரளாக கலந்துக் கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

இவ்வாறு ஆவடி சா.மு. நாசர் எம்.எல்.ஏ. வேண்டுகோள் விடுத்துள்ளார்.



ஈரோடு தெற்கு மாவட்டக் கழக செயலாளரும், அமைச்சருமான சு.முத்துசாமி வழிகாட்டுதலின்படி முத்தமிழறிஞர் கலைஞர் நூற்றாண்டு நிறைவு விழா மற்றும் 101வது பிறந்த நாளையொட்டி ஈரோடு தெற்கு மாவட்டம் மொடக்குறிச்சி கிழக்கு ஒன்றியம், மொடக்குறிச்சி, லக்காபுரம், முத்து கவுண்டம்பாளையம் நஞ்சை ஊத்துக்குளி ஆனந்தம்பாளையம் உள்ளிட்ட இடங்களில் உள்ள பள்ளி மாணவ – மாணவியர் 2000 பேருக்கு நோட் புத்தகம் மற்றும் கல்வி உபகரணங்கள் வழங்கப்பட்டது. நிகழ்வில். மொடக்குறிச்சி மேற்கு ஒன்றிய கழக செயலாளர் சு.குணசேகரன், கழக இளைஞரணி துணை செயலாளரும் ஈரோடு நாடாளுமன்ற உறுப்பினருமான கே.இ.பிரகாஷ் மொடக்குறிச்சி பேரூர் கழக செயலாளர் பி.வி.சரவணன், மொடக்குறிச்சி பேரூராட்சி மன்ற தலைவர் செல்வாம்பாள் மாவட்ட இளைஞரணி முன்னாள் துணை அமைப்பாளர் தனசேகரன், மாவட்ட ஊராட்சி குழு உறுப்பினர் யுவரேகா, தனசேகர் உள்ளிட்ட கழக நிர்வாகிகள் பலர் உள்ளனர்.

## பெரம்பலூர் மாவட்டத்தில் அரசு பள்ளிகளில் பயிலும்

# மாணவ,மாணவிகளுக்கு விலையில்லா புத்தகம் -ஆதார் பதிவு!

## அமைச்சர் சா.சி.சிவசங்கர் தொடங்கி வைத்தார்!

பெரம்பலூர்,ஜூன்,13 பெரம்பலூர் அரசு மேல்நிலைப் பள்ளியில் அரசு பள்ளிகளில் பயிலும் மாணவ,மாணவிகளுக்கு விலையில்லா புத்தகம் மற்றும் நோட்டுகள் வழங்குதல், ஆதார் கார்டு பதிவு மற்றும் புகைப்படம் எடுக்கும் நிகழ்ச்சிகளை, போக்குவரத்துத்துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர் துவக்கி வைத்தார்.

மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி க.கற்பகம் தலைமையில் தொடங்கி வைத்தார்.

இந்நிகழ்வில், பெரம்பலூர் சட்டமன்ற உறுப்பினர் ம.பிரபாகரன் முன்னிலை வகித்தார்.

இந்நிகழ்ச்சியில் போக்குவரத்துத்துறை அமைச்சர் பேசியதாவது:

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் உத்தரவின் படி, அரசு பள்ளியில் பயிலும் மாணவ,மாணவிகளுக்கு இலவச பாடப்புத்தகங்கள் மற்றும் நோட்டு புத்தகங்கள் இன்று தமிழகம் முழுவதும் வழங்கப்படுகின்றது.

பெரம்பலூர் மாவட்டத்தில் அரசு பள்ளிகள், அரசு உதவிபெறும் பள்ளிகள், ஆதிதிராவிடர் நல தொடக்க மற்றும் நடுநிலைப் பள்ளிகளைச் சார்ந்த 25,572 மாணவ,மாணவிகளுக்கும் உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளைச் சார்ந்த 34,659 மாணவ, மாணவிகளுக்கும் விலையில்லா பாடப்புத்தகங்கள் மற்றும் நோட்டுகள் வழங்கப்படவுள்ளது.

அரசுப் பேருந்துகளில் பயணம் செய்யும் மாணவ மாணவிகளின் பாதுகாப்பினை உறுதி செய்யும் வகையில் புதிதாக வாங்கப்பட்டுள்ள அனைத்து பேருந்துகளிலும் தானியங்கி கதவுகள் பொருத்தப்பட்டுள்ளது. ஏற்கனவே இயங்கி வரும் அரசுப் பேருந்துகளிலும் தானியங்கி கதவுகள் பொருத்தும் பணிகள் துவங்கப் பட்டுள்ளது.

மாணவ - மாணவிகள் அரசுப் பேருந்துகளில் பள்ளிக்குச் சென்று வருவதற்காக புதிய பேருந்து பயண அட்டை வரும் வரை பழைய பேருந்து பயண அட்டையினை பயன்படுத்தலாம். மேலும், மாணவ - மாணவிகள் பள்ளிச்சீருடை அணிந்து வந்தால் அவர்களை இலவசமாக பயணம் செய்ய அனுமதிக்க போக்குவரத்துத் துறை அலுவலர்களுக்கும், ஓட்டுநர் மற்றும் நடத்துநர்களுக்கும் அறிவுறுத்தப் பட்டுள்ளது.

பேருந்துகளில் ஜி.பி.எஸ் கருவிகள் பொருத்தப் பட்டு, பேருந்து நிறுத்தத்தில் எல்.இ.டி அறிவிப்பு பலகையுடன் பேருந்து எந்த இடத்தில் வந்துள்ளது என்பதை அறிவிக்கும் நவீன தொழில் நுட்ப வசதி சென்னை பெருநகர வளர்ச்சிக் குழுமம் மற்றும் உலக வங்கி நிதியுதவியுடன் சென்னை மாநகரம் முழுவதும் பரீட் சார்த்த முறையில் செயல்படுத்தப்பட்டுள்ளது.

இவ்வாறு தெரிவித்தார்.

முன்னதாக உலக சுற்றுச் சூழல் தினத்தை முன்னிட்டு சுற்றுச்சூழல் விழிப்புணர்வு குறித்த உறுதிமொழியினை போக்குவரத்துத்துறை அமைச்சர் வாசிக்க அனைவரும் அவரைத்தொடர்ந்து உறுதிமொழி எடுத்துக்கொண்டனர்.

அதனைத்தொடர்ந்து, அரசுப் பள்ளிகளில் புதிதாக 1ஆம் வகுப்பு சேர்ந்துள்ள 3,531 மாணவ,மாணவிகளுக்கு எம்.ஆர்.எஃப் தனியார் நிறுவனத்தின் பங்களிப்புடன் பேனா, பென்சில் உள்ளிட்ட 8 வகையான பொருட்கள் அடங்கிய நார்ப்பைகள் (jude bag) பரிசு பை வழங்கும் பணியினை போக்குவரத்துத்துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர் மாவட்ட ஆட்சித்தலைவர் க.கற்பகம் தலைமையில் பெரம்பலூர் நகராட்சிக்குட்பட்ட முத்துநகர் தொடக்கப்பள்ளியில் தொடங்கி வைத்தார்.

இந்நிகழ்ச்சிகளில், சார் ஆட்சியர் சு.கோகுல், பெரம்பலூர் நகர்மன்ற தலைவர் திருமதி அம்பிகா ராஜேந்திரன், பெரம்பலூர் ஊராட்சி ஒன்றியக் குழுதலைவர் திருமதி மீனா அண்ணாதுரை, மாவட்ட பொறுப்பாளர் வீ.ஜெகதீசன், தலைமைச் செயற்குழு உறுப்பினர் வழக்கறிஞர் என். ராஜேந்திரன், பொதுக்குழு உறுப்பினர் எஸ்.அண்ணாதுரை, முதன்மை கல்வி அலுவலர் (பொ) அண்ணாதுரை, மாவட்ட துணைச் செயலாளர்கள் தழுதாழை பாஸ்கர், சன்.சம்பத், மாவட்ட பொருளாளர் செ.ரவிச்சந்திரன், ஒன்றிய செயலாளர்கள் எம்.ராஜ்குமார், எஸ் நல்லதம்பி, தி. மதியழகன், சி.ராஜேந்திரன், ஒன்றிய பொறுப்பாளர் டாக்டர் செ.வல்லபன், மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் து.ஆதவன்(எ) ஹரிபாஸ்கர்,

மாவட்ட ஊராட்சிக் குழு உறுப்பினர் மகாதேவி ஜெயபால், மாவட்ட அமைப்பு சாரா ஓட்டுநர் அணி அமைப்பாளர் எம். மணிவாசகம், மாவட்ட பிரதிநிதி எஸ்.அழகுவேல், வேப்பந்தட்டை கிழக்கு ஒன்றிய இளைஞர் அணி அமைப்பாளர் ரா.சிவா, மாவட்ட கல்வி அலுவலர் ஜெகநாதன் மற்றும் பலர் கலந்து கொண்டனர்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### தஞ்சை ந. பூபதி

**ஜூன் 13 (2006)**



**தஞ்சை நகரக் கழக முன்னோடிகளில் ஒருவராக திகழ்ந்தவர்.**

**தஞ்சை நகரக் கழகப் பொறுப்பாளர், பொதுக்குழு உறுப்பினர், நகர்மன்றத் துணைத் தலைவர் உள்ளிட்ட பொறுப்புகளை வகித்தவர்.**

**தலைவர் கலைஞர் இடும் கட்டளை எதுவானாலும் அதை அப்படியே ஏற்றுக் கொள்ளக்கூடியவர்.**

**கழகம் அறிவித்த அறப்போராட்டங்களில் பங்கேற்று சிறை சென்றவர்.**

**தலைமைக் கழகம்**

**தி.மு.க.**